**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 413/2018**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.03.2026 | | |
| பெயர்: | ராசா முகமது (DW-2 Cross con) | தகப்பனார் பெயர்: | ஹாஜா மைதீன் |
| கிராமம்: | விளந்திடசமுத்திரம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வியாபாரம் | வயது : | 64/2026 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 04.03.2026**

**(ஆரம்பித்த நேரம்– 13.11)**

1. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது, ஆனால் விஸ்தீரணம் 100 குழிக்கும் மேலாக இருக்கும். பி.வா.சா.ஆ.1 ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் நீண்ட நாட்கள் ஆகிவிட்ட காரணத்தால் எனக்கு தேதி ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்தபோது யார் யார் கூட இருந்தார்கள் என்றால் பூவாலி இருந்தார், யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்றால் நான் ஒரு கையெழுத்து செய்தேன், வேறு ஒருவர் கையெழுத்து செய்தார், அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. பூவாலியும் கையெழுத்து செய்தார்.

2. பூவாலியின் குடும்ப விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. நான் சாட்சி கையெழுத்து செய்ய பூவாலி தான் என்னை கூப்பிட்டார். நான் கையெழுத்து செய்ய பூவாலி எந்த தேதியில் என்னை அழைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீட்டிற்கும் உயில் எழுதிய இடத்திற்கும் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும்.

3. பி.வா.சா.ஆ.1 ஆவணம் போலியானது என்றாலும், பூவாலிக்கு ஆதரவாக நானும் போலியாக கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.21)**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**